©
GOVERNMENT OF TAMIL NADU
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 2.40 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 319A]

சென்னை, சனிக்கிழமை, செப்டம்பர் 10, 2011
ஆவணி 24, திருவள்ளுவர் ஆண்டு — 2042

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

**பொருளடக்கம்**

| | பக்கங்கள் |
|---|---|
| **சட்டமுன்வடிவுகள்:** | |
| எண் 19/2011—தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரி (திருத்தச்) சட்டம் | 2–3 |
| எண் 20/2011—தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டம் .. .. .. .. .. | 5–6 |

**2011–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 10–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க–காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2011**

**2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம், 2011–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரி (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2010–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 26–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

2–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தின் 2–ஆம் பிரிவில்,– (தமிழ்நாடு சட்டம் 32/2006.)

(i) (6)–ஆம் கூறானது விட்டு விடப்படுதல் வேண்டும்.

(ii) (16)–ஆம் கூறுக்கு பின்பு, பின்வரும் கூறானது புகுத்தப்படுதல் வேண்டும். அதாவது:–

''(16–A) ''துணை வணிகவரி அலுவலர்'' என்றால், ஆணையரால் பெயர் குறிப்பிடப்பட்டோ அல்லது அவருடைய பதவியின் காரணமாகவோ, துணை வணிகவரி அலுவலர் ஒருவரின், அதிகாரங்களைச் செலுத்துவதற்கு நியமிக்கப்பட்ட நபர் எவரும் என்று பொருள்படும்.''.

49–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**3.** முதன்மைச் சட்டத்தின் 49–ஆம் பிரிவில், (4)–ஆம் உட்பிரிவில், ''உதவி வணிகவரி அலுவலர் ஒருவர்'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ''துணை வணிகவரி அலுவலர்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

64–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**4.** முதன்மைச் சட்டத்தின் 64–ஆம் பிரிவில், (4)–ஆம் உட்பிரிவில், ''உதவி வணிகவரி அலுவலர்'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ''துணை வணிகவரி அலுவலர்'' எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

81–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**5.** முதன்மைச் சட்டத்தின், 81–ஆம் பிரிவில்,–

(i) (1)–ஆம் உட்பிரிவில் ''உதவி வணிகவரி அலுவலர் ஒருவர்'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ''துணை வணிகவரி அலுவலர்'' எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(ii) (3)–ஆம் உட்பிரிவில் ''உதவி வணிகவரி அலுவலர் ஒருவர்'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ''துணை வணிகவரி அலுவலர்'' எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

82–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**6.** முதன்மைச் சட்டத்தின் 82–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில், ''உதவி வணிகவரி அலுவலர் ஒருவர்'' என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, ''துணை வணிகவரி அலுவலர்'' எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

**நோக்க—காரண விளக்கவுரை**

26—08—2010 எனும் தேதியிடப்பட்ட நிதி (சம்பளப் பிரிவு)த் துறையின் அரசாணை நிலை எண் 265—இல் "உதவி வணிகவரி அலுவலர்" என்ற பதவியினை "துணை வணிகவரி அலுவலர்" என மறு பெயரிட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மேற்சொன்ன அதிகார அமைப்பினை மேற்சொன்னவாறு மறுபெயரிட்டு அழைக்கும் பொருட்டு, 2006—ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) அதிகார அமைப்பிற்கான சுட்டுகைகள், பொருத்தமான முறையில் பதிலாக அமைக்கப்படுதல் வேண்டும். அதற்கிணங்கிய வகையில் அரசானது இந்த நோக்கத்திற்காக மேற்சொன்ன சட்டத்தினைத் திருத்துவதென முடிவு செய்துள்ளது.

2. இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன நோக்கத்தை எய்த விழைகிறது.

**அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி,**
*வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

**2011–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 10–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க–காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2011**

**1975–ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம், 2011–ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 27/1975.

இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்.

**2.** 1975–ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் சட்டத்திற்கான இணைப்புப் பட்டியல்,–

(*a*) 1–ஆம் இனத்தில் ''ஐந்நூறு ரூபாய்'' எனும் சொற்களுக்குப் பதிலாக, ''இரண்டாயிரம் ரூபாய்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(*b*) 2–ஆம் இனத்தில் ''பத்து ரூபாய்'' எனும் சொற்களுக்குப் பதிலாக, ''நூறு ரூபாய்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(*c*) 3–ஆம் இனத்தில் ''இருபத்தைந்து ரூபாய்'' எனும் சொற்களுக்குப் பதிலாக, ''இருநூற்று ஐம்பது ரூபாய்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(*d*) 4–ஆம் இனத்தில் ''இருபத்தைந்து ரூபாய்'' எனும் சொற்களுக்குப் பதிலாக, ''இருநூற்று ஐம்பது ரூபாய்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(*e*) 5–ஆம் இனத்தில் ''நகல் எடுக்கக் கோரப்படும் ஒவ்வொரு நூறு சொற்களுக்கு அல்லது அதன் பின்னப் பகுதிக்கு ஐந்து ரூபாய்'' எனும் சொற்களுக்குப் பதிலாக, ''ஒவ்வொரு பக்கத்துக்கும் பத்து ரூபாய்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(*f*) 6–ஆம் இனத்தில் ''பத்து ரூபாய்'' எனும் சொற்களுக்குப் பதிலாக, ''நூறு ரூபாய்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(*g*) 7–ஆம் இனத்தில் ''நூறு ரூபாய்'' எனும் சொற்களுக்குப் பதிலாக, ''ஆயிரம் ரூபாய்'' எனும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

**நோக்க—காரண விளக்கவுரை**

1975—ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் சட்டத்தின்படி பதிவாளருக்குச் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்களின் இணைப்புப் பட்டியலானது, முன்னதாக 2002—ஆம் ஆண்டு ஜூன் திங்களில் திருத்தி அமைக்கப்பட்டது. கட்டணங்கள், கடைசியாக திருத்தியமைக்கப்பட்டதிலிருந்து ஒன்பது ஆண்டுகளுக்கு மேல் கடந்துவிட்டமையால், அவற்றைப் பதிவுத் துறை வழங்கும் பணிகளின் மதிப்பிற்கேற்றவாறு மாற்றி அமைக்க வேண்டியுள்ளது என்பதால், பதிவாளருக்குச் செலுத்த வேண்டிய கட்டணத்தைத் திருத்துவதெனவும் அந்த நோக்கத்திற்காக 1975—ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு செய்தல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1975) இணைப்புப் பட்டியலைத் திருத்துவதெனவும் அரசு முடிவு செய்துள்ளது.

2. இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி,**
*வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.